# தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம்

தமிழ்நாடு அரசு நிறுவனம்

(ISO 9001 : 2008 தரச்சான்று பெற்ற நிறுவனம் )

எண்.132, ஈ.வெ.ரா. சாலை, கீழ்ப்பாக்கம், சென்னை-10

**தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகத்தால் "உங்கள் சொந்த இல்லத் திட்டத்தின்" கீழ் திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி நகர கூட்டுப்பகுதி குலவணிகர்புரம் கிராமத்தில் கட்டப்படவிருக்கும் 70 வீடுகள் காவல்துறை, தீயணைப்புத்துறை மற்றும் சிறைத்துறைகளில் பணிபுரியும் சீருடை பணியாளர்களுக்காக**

**மாடிக்குடியிருப்பு படம் மற்றும் கட்டடப் பரப்பளவு வரைபடம்**



**'A' மற்றும் 'B' Block ( Stilt + 4 floors)**

## HIG – Floor Area ( 3 BHK) – 24 வீடுகள்

தோராய மதிப்பீடு
**1100 Sq.ft., ரூ.26.03 இலட்சங்கள்**




## MIG – Floor Area ( 2 BHK) – 46 வீடுகள்

தோராய மதிப்பீடு
**786 Sq.ft., ரூ.17.55 இலட்சங்கள்**



## தகுதி

- காவல் துறையில் துணைக்கண்காணிப்பாளர்கள் பதவி வரை
- தீயணைப்புத்துறையில் கோட்டத்தீயணைப்பு அலுவலர் பதவி வரை
- சிறைத்துறையில் சிறை அலுவலர் பதவி வரை

## நிபந்தனைகள்

- தமிழ்நாடு மாநிலம் முழுவதும் ஒரே தொகுப்பாக கருதப்படும். எனவே வீட்டிற்கான ஒதுக்கீடு விண்ணப்பிக்க எல்லா மாவட்டத்தை சேர்ந்தவரும் தகுதியானவர்கள்.

  முன்னுரிமை பெறும் விண்ணப்பத்தாரர்கள்

- ஒதுக்கீடு பெற்ற நபர் ஒதுக்கீடு பெற்ற நாளில் இருந்து ஐந்து ஆண்டுகளுக்குள் ஒதுக்கீடு செய்யப்பட்ட வீட்டை விற்கக் கூடாது
- விண்ணப்பம் சமர்ப்பிக்கும் நேரத்தில் மதிப்பீட்டில் ஒரு சதவிகித தொகையை முன்வைப்பு தொகையாகவும் மற்றும் பதிவுக் கட்டணமாக ரூ.100ம் வசூலிக்கப்படும். ஒதுக்கீடு பெற்ற பின்னர் விண்ணப்பதாரர் விலகிக் கொள்ளும் பட்சத்தில் முன் வைப்புத்தொகை திருப்பித் தரப்படமாட்டாது.
- ஒதுக்கீடு குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்படும்
- மீதித் தொகையை தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகத்தின் நெறிமுறைகளின்படி செலுத்துதல் வேண்டும்
- ஒதுக்கீடு பெற்ற நபர்கள் தாங்கள் செலுத்த வேண்டிய தொகையின்ன அவர்களது சேமிப்பின் மூலம் (அல்லது) அரசு வீடு கட்டும் முன்பணம் ( Govt. HBA) அல்லது வங்கி மூலம் கடன் பெற்று தவணைத் தொகையை செலுத்தலாம், வங்கி மூலம் கடன் பெற விரும்புகிறவர்களுக்கு தேவைப்படின் காவலர் வீட்டு வசதி கழகம் மனுதாரருக்கு தேவையான உதவிகளை வழங்கும்

### விண்ணப்பிக்கும் முறை

விண்ணப்பங்கள் கிடைக்கும் இடம்
காவல் கண்காணிப்பாளர், காவல் ஆணையாளர்
மற்றும் மாவட்ட பிரிவு அலுவலகங்கள் (Unit Officers)
இலவசமாக பதிவிறக்கம் செய்ய
www.tnphc.com
விண்ணப்பம் சமர்ப்பிக்க கடைசி நாள்

**30-11-2015**

மேலும் விவரங்கள் அறிய

தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம்
(ஐ.எஸ்.ஓ 9001-2008 தரச்சான்று பெற்ற நிறுவனம் )
132, ஈ.வெ.ரா. சாலை, கீழ்ப்பாக்கம், சென்னை-10
www.tnphc.com
E-mail:tnphclho@gmail.com

## சிறப்பம்சங்கள்

- குறைந்த விலையில் நிறைவான வசதிகள் / கூடுதல் செலவுகள் இன்றி
- போதுமான குடிநீர் இணைப்பு மற்றும் அனைத்து இடங்களுக்கும் செல்ல சாலை வசதிகள்
- மெருகூட்டப்பட்ட செயற்கை களிமண் ஓடுகள் (Vitrified Tiles), நவீன சமையலறை மற்றும் குளியல் அறை, மின்தூக்கி வசதி மற்றும் வாகன நிறுத்தும் இடம்
- பெட்ரோல் பங்க் 2 கி.மீ. தொலைவிலும் பெண்கள் கல்லூரி 0.50கி.மீ. தொலைவிலும் ஆண்கள் கல்லூரி 3 கி.மீ. தொலைவிலும் உள்ளன.
- ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப்பள்ளிகள் 3 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளன.
- அரசு பொறியியல் கல்லூரி 1.50 கி.மீ. தொலைவிலும், அரசு மருத்துவமனைக் கல்லூரி 3.00 கி.மீ தொலைவிலும் அமைந்துள்ளன.
- திருமண மண்டபம் 0.50 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.
- திருநெல்வேலி சந்திப்பு இரயில் நிலையம் மற்றும் கால்நடை மருத்துவமனை கல்லூரி 6 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.
- அரசு சித்த மருத்துவமனை கல்லூரி 3 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது.
- மாநகர காவல் ஆணையாளர் அலுவலகம், திருநெல்வேலி சரக, காவல் துறை துணைத் தலைவர் அலுவலகம் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகமும் 3 கி.மீ சுற்றளவில் அமைந்துள்ளன.
- மாநகரின் மையப் பகுதியில் அமைந்துள்ளதால் அனைத்து அலுவலககங்களுக்கும் செல்ல பேருந்து வசதி நன்றாக அமைந்துள்ளது
- மேலும் இத்திட்டத்திலிருந்து 2 கி.மீ தொலைவில் நான்கு வழி சாலை அமைந்துள்ளது.
- திட்டப்பகுதியின் இருபுறமும் 80 அடி அகல சாலை வசதி அமைந்துள்ளதால், நல்ல இயற்கையான காற்றோட்டமான சூழலில் இத்திட்டம் அமைந்துள்ளது.

## திட்ட இடம்

திருநெல்வேலி புதிய பேருந்து நிலையத்திலிருந்து 2 கி.மீ. பொதிகை நகர் செல்லும் சாலையை ஒட்டி அமைந்துள்ளது. இது திருநெல்வேலி மாநகராட்சி எல்லைக்குட்பட்டது.




KEY PLAN
NOT TO SCALE

மேலும் தகவல்களுக்கு
திரு. எஸ். குமரகுரு
செயற்பொறியாளர்
தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக்கழகம், திருநெல்வேலி -7 அவர்களை அணுகவும்
தொ.பே: 0462-2554148 / கைபேசி : 9842114074

## <u>விண்ணப்பபடிவம்</u>

பெறுநர்

**தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்,**
தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம்,
சென்னை - 600 010.

ஐயா,

நான் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தால் உங்கள் சொந்த இல்லம் திட்டத்தின் கீழ் **திருநெல்வேலி நகர கூட்டுப்பகுதி குலவணிகர்புரம்** என்ற இடத்தில் வீடு வாங்க விரும்புகிறேன். அதன் பொருட்டு தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் ஒதுக்கீட்டு நிபந்தனைகளுக்கு கட்டுப்படுகிறேன். எனது விவரங்களை கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கிறேன்.

| | | | |
|---|---|---|---|
| 1. | மனுதாரரின் பெயர் | : | |
| 2. | மனுதாரரின் தற்போதைய பதவி / அலுவலகம் | : | |
| 3. | மனுதாரரின் பிறந்த தேதி | : | |
| 4. | திருமணமானவர் / தனி நபர் | : | |
| 5. | (அ) மனுதாரரின் தந்தையின் பெயர் | : | |
| | (ஆ) மனுதாரரின் மனைவி / கணவர் பெயர் | : | |
| 6. | மனுதாரரின் சொந்த மாவட்டம் | : | |
| 7. | தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம் தொடர்பு கொள்ள வேண்டிய மனுதாரரின் அஞ்சல் முகவரி, ( கைபேசி எண்ணுடன் ) | : | |
| 8. | பணியில் சேர்ந்த நாள் | : | |
| 9. | ஊதியத்தின் மூலம் ஆண்டு வருமானம் (ஊதியச் சான்று அல்லது ஊதியப் பட்டியல் இணைக்கவும்) | : | |
| 10. | ஊதியத்தை தவிர இதர வருமானத்தின் விவரங்கள் | : | |
| 11. | மனுதாரரின் PAN எண் குறிப்பிட வேண்டும் | : | |
| 12. | மனுதாரருக்கு ஏற்கனவே சொந்த வீடு உள்ளதா அல்லது அவருடைய கணவர் / மனைவி பெயரில் உள்ளதா ? | : | ஆம் / இல்லை |
| | ஆம் எனில் விபரங்களைக் குறிப்பிடவும் | | |
| 13. | இதற்கு முன் மனுதாரர் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தில் வீடு வாங்கியவரா (அ) விண்ணப்பித்துள்ளாரா? | : | ஆம் / இல்லை |
| | ஆம் எனில் விபரங்களைக் குறிப்பிடவும் | | |
| 14. | வீட்டிற்காக செலுத்த வேண்டிய தொகையினை மனுதாரர் எந்த வகையில் செலுத்த திட்டமிட்டுள்ளார் | : | சேமிப்பு / அரசு கடன் / வங்கி கடன் / இதர வகைகள் |

# உறுதிமொழி

15.

- மேலே கொடுக்கப்பட்டுள்ள விபரங்களை அனைத்தும் உண்மையானவை. தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்திற்கு வேறு ஏதாவது விவரங்கள் தேவைப்படுமாயின் அதை கொடுக்க தயாராக உள்ளேன். இக்கழகம் கோரும் விவரங்களை நான் சமர்பிக்க கால தாமதம் ஏற்படும் பட்சத்தில் எனது விண்ணப்பப்படிவத்தினை தள்ளுபடி செய்ய நான் சம்மதிக்கிறேன்.
- எந்த நேரத்திலும் என்னால் கொடுக்கப்பட்ட தகவல் உண்மைக்கு புறம்பாக இருப்பின் எனக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட உத்திரவை ரத்து செய்வதற்கும், ஒதுக்கீடு செய்ய பெற்ற அடுக்குமாடி வீட்டினை என்னிடமிருந்து திரும்ப எடுத்துக் கொள்வதற்கும், வீட்டிற்கான முழுத்தொகையும் அல்லது நான் கட்டிய தொகை முழுவதையும் இழக்க சம்மதிக்கிறேன்.
- எனது விண்ணப்பப் படிவத்தைக் கழகம் ஏற்றுக் கொண்டு எனக்கு வீடு ஒதுக்கீடு செய்யும் பட்சத்தில் அவ்வீட்டிற்காக கழகம் நிர்ணயம் செய்யும் விலையினை செலுத்த சம்மதிக்கிறேன்
- எனக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள வீட்டினை, ஒதுக்கீடு செய்த நாளிலிருந்து ஐந்து ஆண்டுகள் வரை விற்பனை செய்யமாட்டேன் என உறுதி அளிக்கிறேன்,
- ஒதுக்கீடு மற்றும் இதர விவரங்களில் ஏதாவது பிரச்சினையோ அல்லது சந்தேகமோ ஏற்படின், தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் உத்திரவிற்கு கட்டுப்படுவேன் என உறுதி அளிக்கிறேன்,
- இத்துடன் இணைக்கப்பட்டுள்ள இத்திட்டம் சம்மந்தமான சிறப்பு அம்சங்களை நான் அறிவேன்.

16. முன் பணத் தொகைக்காக ..................................................................................வங்கியில் பெறப்பட்ட ரூ..................................... ( ரூபாய் ............................................................... மட்டும் ) க்கான வங்கி வரைவோலை எண் .................................... நாள் ................................................ விண்ணப்பதத்துடன் இணைத்துள்ளேன்.

17. எனக்கு வீடு ஒதுக்கீடு செய்யப்பட்ட பின்னர், நான் ஒதுக்கீட்டை ஏற்றுக் கொள்ளத் தவறினால் நான் செலுத்திய முன்பணம் திரும்ப கிடைக்காது என அறிவேன்.

இடம் :

நாள் :

விண்ணப்பதாரரின் கையொப்பம்

# பிரிவு அதிகாரியின் மேல் வரைவு

மனுதாரரால் மேலே குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மையானவை என சான்று அளிக்கிறேன்.

இடம் :

நாள் :

பிரிவு அதிகாரியின் கையொப்பம்

பெயர் :

பதவி மற்றும் பணியிடம் :

( முத்திரை )